அளிக்கக்கூடிய பல்வேறு சலுகைகளைப் பார்த்து, தொழிலதிபர்கள் வரவிருக்கின்றார்கள். அந்த வகையிலே, சிவகங்கை மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்னுரிமை கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**186—**

## பேருந்து வசதி

***19718—திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரிலிருந்து டி.தேவனூர் வழியாக வெள்ளம்புத்தூருக்கு பேருந்து இயக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்பிட்ட கரம் விலகும் முன் வரம் தரும் அன்னை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால், (மேசையைத் தட்டும் ஒலி) 11-9-2012 அன்று திருக்கோவிலூரிலிருந்து திருமலைப்பட்டி வழியாக டி.தேவனூர், வெள்ளம்புத்தூர் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டு, மக்கள் பயனடைந்து வருகின்றனர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

2014 ஜூலை 18]

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.தேவனூர் வழியாக திருக்கோவிலூரிலிருந்து வெள்ளம்புத்தூருக்குப் பேருந்து இயக்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருக்கோவிலூரிலிருந்து புத்தூர்-மேலக்குண்டூர்-சத்திரம்-கிங்கிலிவாடி வழியாக ஆலம்பாடிவரை சென்று வந்த தடம் எண் 23, காடகனூர்-வி.சித்தாமூர் வழியாகச் சென்று வந்த தடம் எண் 13, காடகனூர்-சித்தாமூர் வழியாக குயவன்காடுவெட்டி வரை சென்று வந்த தடம் எண் 22, முகையூர்-காரணை-ஒதியத்தூர்-அனந்தபுரம் வழியாக சென்னை வரை சென்ற தடம் எண் 122V, திருக்கோவிலூரிலிருந்து திருச்சி வரை சென்று வந்த தடம் எண் 305, திருக்கோவிலூரிலிருந்து லாலாப்பேட்டை மற்றும் மூங்கில்துறைப்பட்டு வரை தினசரி இரண்டு நடைகள் இயங்கிக் கொண்டிருந்த தடம் எண் 26, திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரம் வழியாக திருச்சி வரை சென்ற தடம் எண் 325, திருக்கோவிலூர்-திருவெண்ணெய்நல்லூர்-அரசூர் வழியாக விழுப்புரம் வரை இரண்டு நடைகளும், திருவெண்ணெய்நல்லூர்-ஏனாதிமங்கலம் வழியாக விழுப்புரம்வரை இரண்டு நடைகளும் இயக்கப்பட்டு வந்த தடம் எண் 153C ஆகிய பேருந்துகள் இயக்கப்படாமல் உள்ளன. அதனால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். அதேபோன்று, திருக்கோவிலூரிலிருந்து பரனூர்-ஆற்காடு-பையூர் வழியாகப் புதிய பேருந்து இயக்கவும் அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய, அடித்தட்டு மக்கள், கிராம மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டும் என்பதற்காக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 19,110 ஆக இருந்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், 20,684 பேருந்துகளாக அதிகரித்து இயக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மக்களுக்கு மகத்தான சேவை வழங்கியிருக்கின்றார் வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) மக்களுடைய பயன்பாட்டுக்காக இயக்கப்பட்டுவந்த பேருந்துகளில், எந்தவொரு பேருந்தும் இதுவரையிலும் நிறுத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியது தவறான கருத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில்கூட, உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே, மக்களுடைய தேவைகளை அறிந்து, மக்களுக்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழு பேருந்துகளை புதிய வழித்தடங்களில் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்த வழித்தடத்தை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ப, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழித்தடங்களை நிறுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து அதை ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நேற்றையதினமே நான் இந்தக் கருத்தைத் தெரிவிப்பதாக இருந்தேன். இருந்தாலும், 100 சதவீதம் கல்வியறிவைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான், அதிக அளவில் ஆசிரியர்களை அரசு நியமனம் செய்ய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. போக்குவரத்துத் துறை சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கள்.

*முற்பகல் 10-40*

**திரு. எல். வெங்கடேசன்:** ஆசிரியர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதோடு உங்கள் கேள்வியை நிறுத்துங்கள். (குறுக்கீடு) போக்குவரத்துத் துறை சம்பந்தமாக நீங்கள் கேள்வியைக் கேட்கிறீர்களா, இல்லையா?

2014 ஜூலை 18]

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை பற்றிதான் பேசுகிறேன். உதாரணத்திற்கு, எங்களுடைய மாவட்டம் 1,099 ஊராட்சிகளைக் கொண்ட மிகப் பெரிய மாவட்டம். கிராமங்களில் அதிக அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். காலை 9-30 மணிக்கு அரசுப் பள்ளிகள் ஆரம்பிக்கின்றன என்றால், அவர்களுக்கான பேருந்து காலை 10-00 மணிக்கு வருவதால், அந்த ஆசிரியர்கள் காலை 10-00 மணிக்குத்தான் பள்ளிக்கு வருகிறார்கள். அதேபோன்று மாலை 4-15 மணிக்கு பள்ளி விடுகின்றார்கள் என்றால், மாலை 4-00 மணிக்கு பேருந்து வருவதால், மாலை 4-00 மணிக்கே அந்த ஆசிரியர்கள் பள்ளியை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். 3-30 மணிக்கு பேருந்து வருவதாக இருந்தால், 3-30 மணிக்கே பள்ளியை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். தமிழகம் முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கும் என்று நினைக்கின்றேன். அதனால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். எனவே, பேருந்துகளை இயக்குகின்றபோது, அந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் இயங்கும் நேரத்திற்குத் தகுந்தாற்போல், ஆய்வு செய்து, பேருந்துகளை இயக்கினால், நிச்சயமாக அரசினுடைய எண்ணம் முழுமை பெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையிலிருந்தும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்தும், அந்தந்தப் பள்ளிகளிடமிருந்தும் பேருந்துகளின் நேரம் மாற்றம் குறித்து வந்த மனுக்களுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தப் பள்ளிகள் கேட்கின்ற நேரத்தில் 100 சதவிகிதம் பேருந்துகளை இயக்கவேண்டுமென்று உத்தரவிட்டு, அதனடிப்படையில் சிறப்பான முறையிலே அந்தந்தப் பகுதி மக்களுக்குப் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது, எந்தப் பள்ளிகளிடமிருந்தும் பேருந்துகளின் நேரம் மாற்றம் குறித்த மனுக்கள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளிக்கு, குறிப்பிட்ட நேரத்தில் பேருந்து வசதி வேண்டுமென்று சொன்னால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கக்கூடியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும், இந்த மூன்று ஆண்டுகளில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 47 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை அந்தப் பகுதி மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, முந்தைய ஐந்து ஆண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட 19,110 பேருந்துகளில் 8,871 பேருந்துகள் சாதாரண கட்டணத்தில்தான் இயக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, ஏழையெளிய மக்கள் பயன்பெறவேண்டும் என்பதற்காக, தற்போது இயக்கப்படும் 20,684 பேருந்துகளில், 10,492 பேருந்துகள் சாதாரண கட்டணத்தில் இயக்கப்பட்டு, மக்களுக்கு மகத்தான போக்குவரத்து சேவையை வழங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீதமுள்ள வினாக்கள் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பெறும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு மேற்பார்வைக் குழு எடுத்த முடிவின்படி அடைப்பான்கள் இறக்கப்பட்டது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.